**தலைப்பு 176 – சிவில் விமான சேவைகள் அமைச்சு**

---

**கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கை – 2013 ஆம் ஆண்டு**

---

**1.1 கணக்காய்வின் நோக்கெல்லை**

சிவில் விமான சேவைகள் அமைச்சின் 2013 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கை, இணக்கக் கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்குஇலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையில் உள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2014 நவம்பர் 18 ஆம் திகதி அமைச்சுச் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள், கருத்துரைகள், மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களின் மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகளது, போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு உள்ளடக்கத்தினை கொண்டு காணப்படுகின்றது.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு**

---

ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கூற்று மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரச நிதி மற்றும் நிர்வாக பிரமாணங்களுக்கு இணங்க பேணப்பட்டு வருதல், தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற வகையிலான கணக்குகள், இணக்கக் கூற்றுக்கள் என்பவற்றை தயாரித்தல் மற்றும்

நியாயமாகச் சமர்ப்பிக்கப்படுவதற்குரிய உள்ளகக்கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் நடாத்தலும் இப் பொறுப்பில் உள்ளடங்கும்.

**1.3 கணக்காய்வு அவதானிப்புகள்**

2013 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம், சிவில் விமான சேவைகள் அமைச்சின் ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்று இதன் (அ) முதல் (இ) வரை காண்பிக்கப்பட்டுள்ள பொது அவதானிப்பு மற்றும் 1.4 முதல் 1.7 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புகள் என்பவற்றை தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளதாக அவதானிக்கப்பட்டுள்ளது.

**(அ) ஒதுகீட்டுக் கணக்கு**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(i) மொத்த ஏற்பாடுகள் மற்றும் செலவினம்**

அமைச்சிற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மொத்த தேறிய ஏற்பாடு ரூபா 15,320,225,497 ஆனதுடன் மீளாய்வாண்டின் இறுதியில் இதில் ரூபா 14,888,444,055 தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் படி, தேறிய ஏற்பாட்டில் ரூபா 431,781,442 தொகை அதாவது 3 சதவீதம் எஞ்சியிருந்தது. விபரம் பின்வருமாறாகும்.

| செலவினம் | 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | தேறிய ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| | தேறிய ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | |
| | ரூபா | ரூபா | ரூபா | |
| மீண்டெழுபவை | 141,201,195 | 133,075,129 | 8,126,066 | 6 |
| மூலதனம் | 15,179,024,302 | 14,755,368,926 | 423,655,376 | 3 |
| மொத்தம் | 15,320,225,497 | 14,888,444,055 | 431,781,442 | 3 |

**(ii) பாதீட்டு முரண்கள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

- 06 செலவின விடயங்களுக்காக மிகை ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த காரணத்தால் ஏற்பாடு பயன்படுத்தப்பட்டதை அடுத்து சேமிப்பு அச் செலவின விடயங்களுக்குரிய தேறிய ஏற்பாட்டில் 12 சதவீதத்திலிருந்து 84 சதவீதம் வரையான வீச்சளவைக் கொண்டிருந்தது.

- பாதீட்டுத் துணைச் சேவைகள் அவசர தேவைப் பொறுப்புச் செயற்திட்டத்தின் கீழ் பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 29,550,000 தொகையான ஏற்பாட்டில் மீளாய்வாண்டின் இறுதியில் இதில் 65 சதவீத அளவு பயன்படுத்தப்பட்டிருந்தது.

**(ஆ) வருமானக் கணக்குகள்**

**மதிப்பீடும் உள்ளபடியான வருமானமும்**

அமைச்சால் 2013 ஆம் ஆண்டிற்கான வருமானக் குறியீடு 20.03.02.08 இற்காக ரூபா 2,652 மில்லியன் கூட்டுத்தொகையான வருமானம் மதிப்பிடப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது ரூபா 2,784 மில்லியன் கூட்டுத்தொகையான வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. இதன் படி மதிப்பிடப்பட்ட வருமானத்தில் 105 சதவீத வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. விபரம் பின்வருமாறாகும்.

| வருமானக் குறியீடு | 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | மிகை மதிப்பிடப்பட்ட வருமானத்தின் சதவீதமாக |
|---|---|---|---|---|
| | மதிப்பிடப்பட்ட வருமானம் | உள்ளபடியான வருமானம் | சேமிப்பு | |
| | ரூபா | ரூபா | ரூபா | |
| 20.03.02.08 | 2,652,000,000 | 2,783,782,985 | 131,782,985 | 5 |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த வருமானக் கணக்கு தொடர்பாக அமைச்சால் நிதிப் பிரமாணம் 142(3) இன் பிரகாரம் ஏடுகள் பேணப்பட்டிருக்கவில்லை. அமைச்சால் சிவில் விமான சேவைகள் அதிகாரசபையால் மாதத்திற்கு இரண்டு தடவைகள் பெற்றுக்கொள்ளப்படும் வருமான விபரங்களைப் பயன்படுத்தி வருமானக் கணக்கு தயாரிக்கப்பட்டு கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

(ii) 2002 யூலை 17 ஆம் திகதிய 01/2002 ஆம் இலக்க அரசாங்க நிதிக் கொள்கைகள் மற்றும் பொருளாதார நடவடிக்கைகள் சுற்றறிக்கையின் 03 ஆம் பந்தி மற்றும் நிதிப் பிரமாணத்தின் 142 இன் பிரகாரம் வருமான எதிர்வுகூறல்கள் மற்றும் மதிப்பீட்டு நடவடிக்கைகள் சரியான அடிப்படையில் கணிப்பிடப்பட்டு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பீட்டைத் தயாரிப்பதற்குரிய தகவல்களின் படி 2013 பெப்ரவரி முதல் யூலை வரையான 6 மாதங்களின் வருமானம் இரட்டிப்பாக்கப்பட்டு திருத்தப்பட்ட வருமான மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருந்தது. வருமான வேறுபாட்டின் படி, நிதிப் பிரமாணம் 85(2)(ஆ) இன் பிரகாரம் வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தரால் அரசாங்க நிதிக் கொள்கை மற்றும் பொருளாதார அலுவல்கள் திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டு திருத்தப்பட்ட மதிப்பீடு தயாரிக்கப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(இ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்**

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகள்**

அமைச்சிற்கு உரித்தான அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளபடியான தொகைகள் பின்வருமாறாகும்.

| விடய இல. | செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|---|
| | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடியானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 17601 | 2,500,000 | 1,561,251 | 1,700,000 | 1,831,652 | 14,000,000 | 7,818,840 |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

04 ஆண்டுகளுக்கு அண்மித்த காலமாக நிலுவையாகக் காணப்பட்ட சேவை இடைநிறுத்தம் செய்யப்பட்ட மூன்று உத்தியோகத்தர்களின் ரூபா 376,426 கூட்டுத்தொகையான கடன் மீதி தாபனவிதிக் கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 4.5 ஆம் பிரிவின் பிரகாரம் அறவிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 1.4 இணக்கமின்மைகள்

### சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் முதலியவற்றுடன் இணக்கமின்மை

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளிற்கு இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே விபரிக்கப்பட்டு காண்பிக்கப்பட்டுள்ளன.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் முதலியவற்றுடனான தொடர்பு | பெறுமதி | இணக்கமின்மை |
|---|---|---|---|
| | | ரூபா | |
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை | | |
| | XX ஆம் அத்தியாயத்தின் 11.1 ஆம் பிரிவு | 725,834 | இரண்டு வெளிநாட்டுப் பயணங்களில் கலந்துகொண்ட இரு உத்தியோகத்தர்களுக்கு சிக்கன வகுப்பில் விமானச் சீட்டுக்களுக்குப் பதிலாக வியாபார வகுப்பின் விமானப் பயணச்சீட்டுக்கள் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தன. |

(ஆ) நிதி, திட்டமிடல் அமைச்சின் சுற்றறிக்கை

-----------------------------------------

| | | |
|---|---|---|
| 2010 ஒக்டோபர் 11 ஆம் திகதிய 01/2010/01 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 6(i) ஆம் பந்தி | 1,292,488 | இரண்டு வெளிநாட்டுப் பயணங்களில் கலந்துகொண்ட நான்கு உத்தியோகத்தர்களுக்காக தங்குமிட வசதிகள் உரிய வெளிநாட்டு நிறுவகத்தின் மூலம் வழங்கப்பட்டிருக்கையில் அவ் உத்தியோகத்தர்களுக்கு இணைந்த படிப்பணம் செலுத்தப்பட்டிருந்தது. |

(இ) அரசாங்க நிதிச் சுற்றறிக்கை

--------------------------------------

| | | |
|---|---|---|
| 2000 செப்தெம்பர் 01 ஆம் திகதிய 446 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 2 ஆம் பந்தி மற்றும் 2011 நவம்பர் 15 ஆம் திகதிய 01 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கை கடிதம் | 139,434 | அமைச்சின் நிர்வாக உத்தியோகத்தர்களுக்கு கடமைத் தேவைப்பாடுகளுக்காக வீட்டு மற்றும் கையடக்கத் தொலைபேசிக்கான கொடுப்பனவு மேற்கொள்ளப் பட்டிருக்கையில் முகாமைத்துவ உதவியாளர் சேவையின் 1 ஆம் தரத்திலான மூன்று உத்தியோகத்தர்களில் ஒரு பெண் உத்தியோகத்தருக்கு மாத்திரம் சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு மாறாக முறையான அங்கீகாரம் இன்றி வீட்டு மற்றும் கையடக்கத் தொலைபேசிக் கட்டணம் 2011 ஆம் ஆண்டு முதல் 2014 ஆகஸ்ட் வரை செலுத்தப்பட்டிருந்தது. |

**1.5 செயலாற்றல்**

2013 ஆம் ஆண்டிற்காக அமைச்சால் தயாரிக்கப்பட்ட செயல் நடவடிக்கைத் திட்டத்தின் படி காலாண்டு ரீதியாகவும் வருட இறுதியில் நிதி மற்றும் பௌதீக முன்னேற்றத்தைக் காண்பிக்கும் முன்னேற்ற அறிக்கையும் அமைச்சால் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. இதனால் அமைச்சின் செயற்பாடுகளின் முன்னேற்றம் கணக்காய்வின் போது பரீட்சிக்கப்படுவதற்கு முடியாதிருந்தது.

**1.6 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல்வாங்கல்கள்**

அமைச்சால் மேற்கொள்ளப்பட்ட சில கொடுக்கல் வாங்கல்கள் சர்ச்சைக்குரிய தன்மை வாய்ந்தவையாகக் காணப்பட்டன. தெரிவுக் கணக்காய்வின் போது கண்டறியப்பட்ட அத்தகைய சில கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான விபரம் பின்வருமாறாகும்.

(அ) அமைச்சின் 2012 – 2016 ஆம் ஆண்டிற்கான கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கும் செயற்பாட்டிற்காக அவ் விடயத்தின் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ள உதவி பணிப்பாளர் (திட்டமிடல்) பதவியை வகிக்கும் பெண் உத்தியோகத்தர் ஒருவர் அமைச்சின் சேவையில் ஈடுபட்டிருக்கையில் அச் செயற்பாடு வேறு நிறுவகத்திடம் ஒப்படைக்கப்பட்டு இதற்காக ரூபா 225,000 தொகை 2012 ஆம் 2013 ஆம் ஆண்டுகளின் போது அந் நிறுவகத்திற்குச் செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) அமைச்சின் கௌரவ பிரதி அமைச்சரால் அவிஸ்ஸாவெல்ல தேர்தல் பிரிவில் கடமையாற்றிய வைபவமொன்றில் ஊடக தொடர்பாடல் நடவடிக்கைகளுக்காக அமைச்சால் ரூபா 62,500 தொகை செலவிடப்பட்டிருந்தது.

(இ) கௌரவ அமைச்சராலும் கௌரவ பிரதி அமைச்சராலும் பாராளுமன்றத்தில் நடாத்தப்பட்ட கூட்டங்களின் உபசார நடவடிக்கைகளுக்காக அமைச்சால் ரூபா 16,797 தொகை செலவிடப்பட்டிருந்தது.

(ஈ) அம்பாந்தோட்டை மத்தள புதிய விமான நிலைய வளவில் ஹொட்டேல் ஒன்றை நிர்மாணிப்பதற்காக அடிக்கல் நாட்டும் விழா தொடர்பான பத்திரிகை வெளியீடு வெளியிடப்படுவதற்கான செலவினத்தை ஏற்பதற்கு உரிய நிர்மாண ஒப்பந்தக் கம்பனி உடன்பட்டிருந்த போதிலும் அத் தொகை அக் கம்பனியிடமிருந்து பெற்றுக்கொள்ளப்படாது அமைச்சால் இதற்காக ரூபா 230,160 செலவிடப்பட்டிருந்தது.

## 1.7 மனித வள முகாமைத்துவம்

### (அ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் மற்றும் உள்ளபடியான பதவியணியினர்

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 09 | 09 | - |
| (ii) | மூன்றாம் நிலை | 02 | 02 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 40 | 37 | 03 |
| (iv) | ஆரம்ப நிலை | 21 | 15 | 06 |
| (v) | அமைய | 05 | 05 | - |
| | மொத்தம் | 77 | 68 | 09 |

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

மீளாய்வாண்டின் இறுதி வரையில் 09 வெற்றிடங்களை நிரப்புவதற்கு அமைச்சு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) வேறு தரப்பினரிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட மனிதவளங்கள்

விமான சேவைகள் கம்பனியிடமிருந்து தட்டெழுத்தாளர் மற்றும் விமான நிலைய சேவைப் பணிப்பெண் முறையே 03 ஆண்டுகள் முதல் 05 ஆண்டுகள் வரையான காலமாக அமைச்சுப் பணிகளுக்காக ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.